


# கர்பரக்ஷாம்பிகா ஸமேத முல்லைவனநாதர் கோயில் , திருக்கருகாவூர்

## அட்டவணை

| | |
|---|---|
| தலம் | திருக்கருகாவூர் |
| கோயில் பெயர் | முல்லைவனநாதர் கோயில் |
| இறைவன் | முல்லைவனநாதர் |
| இறைவி | கர்பரக்ஷாம்பிகை |
| பாடியவர் | அப்பர் / ஞானஸம்பந்தர் |
| ரயில் நிலையம் | பாபநாஸம் |
| அருகாமையில் உள்ள ஊர் | கும்பகோணம் |
| ஊரிலிருந்து தொலைவு | 22 கீ.மீ |
| தலம் நோக்கும் திசை | கிழக்கு |
| லிங்கம் | ஸ்வயம்பு |




## தலக்குறிப்பு

வெட்டாற்றின் கரையில் உள்ள தலம். கும்பகோணம் - மெலட்டூர் வழியாக தஞ்சாவூர் செல்லும் சாலையில் உள்ள தலம். தஞ்சை - திருக்கருகாவூர் மற்றும் கும்பகோனம் - திருக்கருகாவூர் நகரப் பேருந்துகள் உள்ளன . தஞ்சை - கும்பகோணம் சாலையில் பாபநாசம் வந்து , அங்கிருந்து தெற்காக சாலியமங்கலம் செல்லும்
சாலையில் வந்தால் 6 கீ மீ யில் உள்ளது . தேவாரப் பாடல் பெற்ற தலமாயினும் , அனைவருக்கும் கர்பரக்ஷாம்பிகை அல்லது கருக்காத்த நாயகி கோயில் என்று கேட்டால்தான் நன்றாக தெரிகிறது .




## கோயில் அமைப்பு

மிகவும் அழகான சிறிய கிராமம் . பேருந்து நிலையத்திலிருந்து கோயில் சுமார் 0.4 கீ மீ




இருக்கும். இடப்புறம் வெட்டாறு கூடவே வருகிறது . எதிரில் குளம் உள்ளது . இவ்வூரின் நான்கு வீதிகளுக்கு இடையில் கோயில் அழகுற அமைந்துள்ளது . 460 அடி நீளமும் , 284 அடி அகலமும் உடையது . கிழக்கில் ஒரு ராஜகோபுரமும் , தெற்கில் ஒரு நுழைவு வாயிலும் உள்ளன . உள்நுழைந்ததும் தெற்கே நந்தவனமும் , வடப்பக்கம் வஸந்த மண்டபமும் உள்ளன . வெளிப்பிரகாரம் நந்தவனமாக பயன்படுகின்றது . ஸ்வாமி சன்னிதி எதிரே தெரிகிறது. அதற்கு தென்கிழக்கே அறுபத்துமூவர் மண்டபமும் மடப்பள்ளியும் உள்ளன .உள்சுற்றில் வினாயகர் , இரட்டை நந்தி , இரு பலிபீடங்கள் , அறுபத்துமூவர் , தக்ஷிணா மூர்த்தி , ஸந்தனாச்சாரியார்கள் , முருகன் ,கஜலக்ஷ்மி , தலமரம் முல்லை ரத வடிவிலான ஸபா மண்டபம் , அதில் நிருத்துவ முனிவர் பூஜித்த லிங்கம் ஆகியன உள்ளன .

இறைவன் சுயம்பு லிங்கமாக காட்சியளிக்கிறார் . புனுகு சட்டம் மட்டுமே சார்த்தப்படுகிறது . அபிஷேகம் ஆவுடையாருக்கே . சுவாமி திருமேனியில் முல்லைக் கொடி சுற்றிய வடு உள்ளது . உயரமான திருமேனி . மிகவும் நிறைவான தரிஸனம் . ஸன்னிதியின் முன் சுவற்றில் தல புராணம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது . ஸ்வாமி சன்னிதியின் இரண்டாம் சுற்றை விட்டு வெளியே வந்தால் இடப்பால் அம்மன் சன்னிதி . தற்சமயம் அம்மன் மிகவும் பிரபலமாக உள்ளதால் ( சிவன் எப்போதுமே சற்று சிவனே என்றுதான் இருப்பார் போலும் ?? ) செழிப்பை அம்மன் சன்னிதி மற்றும் அது சார்ந்த பகுதிகளில் நன்றாகவே காண முடிகிறது . இறைவனுக்கு முல்லை மலர் பூக்குங்காலத்தில் சார்த்தப்படுகிறது .




அம்மன் மிகவும் அழகாக அலங்காரம் செய்யப்பட்டு காட்சியளிக்கிறாள் . அங்கேயே நிறுத்தி வைத்துவிடும் தோற்றம் . 5 முதல் ஐந்தரை அடி உயரம் உள்ள சிற்பம் . அழகான வேலைப்பாடு அமைந்த மண்டபம் . இங்கும் ஸ்வாமி சன்னிதி போலே தலபுராணம் ஓவியமாக வரையப்பட்டுள்ளது . அம்பிகையின் கோயில் தனியே திருச்சுற்றுடனும் , ஒரு மண்டபத்துடனும் விளங்குகின்றது . அம்மன் கோயிலுக்கு வெளிப்பக்கம் கௌதமர் பூசித்த லிங்கம் தனி ஸன்னிதியாக அமைந்துள்ளது .

இங்குள்ள நந்தி உளி படாத மூர்த்தம் என்பர் . கோயிலில் ஸ்வாமி மற்றும் அம்பாளுக்கு இடையில் முருகன் சன்னிதி அமைந்துள்ளது . ஸோமாஸ்கந்த நிலையை நினைவூட்டும் விதமாக இது அமைந்துள்ளது .
தல விருட்சமாகிய முல்லைக்கொடி ஸ்வாமியின் உட்பிரகாரத்தில் சண்டேச்சுரருக்கும் , திருமஞ்சனக்கிணற்றுக்கும் இடையில் அமைந்துள்ளது . கோயிலின் உள்ளே

செல்லும் போதே செயல் அலுவலகம் உள்ளது . அர்ச்சனை சீட்டு , அம்பாள் திருவடியில் அபிஷேகம் செய்ய நெய் , விளக்கெண்ணை ஆகியன கிடைக்கின்றன .

இத்தலத்தில் உள்ள தீர்த்தங்கள் வருமாறு க்ஷீர குண்டம் - இக்கோயிலுக்கு முன்னல் உள்ள குளம் . காமதேனுவால் உருவாக்கப் பெற்றது . சத்தியகூபம் - சுவாமி கோயிலுக்கும் , அம்மன் கோயிலுக்கும் இடையே அமைந்துள்ளது பிரம்ம தீர்த்தம் - இவ்வூருக்கு தென்மேற்கில் கற்சாலைக்கு கீழ்பக்கம் உள்ளது விருத்த காவிரி - காவிரியின் கிளை ஆறான வெட்டாறு




சோழ நாட்டில் கோயில்களுக்கு குறைவிலையென்றாலும் , பல கோயில்கள் கேட்பாரற்று சிதிலமாகி வரும் வேளையில் இத்தலம் போன்ற சில , சிறப்பு வாய்ந்த பிரார்த்தனை தலங்களாக விளங்குவது நம்மை மகிழ்ச்சியுறச் செய்கின்றது . சங்க காலத்திலேயே ஆவூர் , நல்லூர் , திருக்கருகாவூர் ஆகியன சிறப்பு பெற்ற ஊர்களாக இருந்தன . இ∴து தண்டகாரண்ய வனத்தின் ஒரு பகுதியாகும் . ஈஸன் சுவயம்பு . இவர் தான்தோன்றி நாதர் . இப்பெருமானை கிருதயுகத்தில் தேவர்களும் திரேதாயுகத்தில் முனிவர்களும் , துவாபரயுகத்தில் , சூர்ய , சந்திர நட்சத்திரங்களும் , கலியுகத்தில் மனிதரும் , முனிவரும் வணங்கி வந்தனர் . முல்லைக்காடாக இருந்த இந்த வனத்தில் அமுதம் மற்றும் ஐம்பெரும்பூதங்களால் ஏகமானதோர் லிங்கத்திருமேனி உருவானது . அந்த லிங்கத்தை முல்லைக்கொடிகள் தழுவிப் படர்ந்திருந்தன . முல்லைக்கொடிகள் சுற்றிய தழும்பை இன்னும் லிங்கத்தில் பார்க்கலாம் . அக்காலத்திலேயே கருவுற்ற மகளில் இத்தலத்தில் தங்கி மகப்பேரு எய்தி , மகிழ்வுற்று வழிபாடு செய்து மழலைச் செல்வத்துடன் தங்கள் ஊருக்கு திரும்பிச் சென்றுள்ளனர் . போர் நிகழும் காலங்களில் இவ்வூர் கருவுற்ற பெண்களுக்கு அடைக்கலமாக முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளது . தமிழில் முல்லைவனநாதர் என்றும் ஸமஸ்க்ருதத்தில் மாதவி வனேஸ்வரர் என்றும் வழங்கப்படும் ஈஸனே இத்தலத்துப் பிரதான நாயகராவார் . முல்லைவனனத்தில் புற்றுருவில் சுயம்புவாக தோன்றியதால் இறைவனுக்கு இப்பெயர் .




## தல புராணம்

பிரம்மா பூஜித்தது

பிரம்மன் படைப்புத் தொழிலினை தான் மேற்கொண்டதால் ஆனவம் கொள்ள , அதனால் அது கைகூடாது போயிற்று . அதனால் பிரம்மன் இத்தலத்திற்கு வந்து தென்மேற்கு மூலையில் தன் பெயரால் ஒரு தீர்த்தத்தை நிறுவி , முல்லைவனநாதரை பூஜித்து தன் தொழில் மீண்டும் கைகூடப் பெற்றுன் .

கார்க்கிய முனிவர் - சுவர்ணாகரன் கதை

சுவர்ணாகரன் என்னும் வைசியன் தான் ஸெய்த தீ வினையால் பேயுருக் கொண்டான்.
பின்பு கார்க்கியர் என்னும் முனிவரிடம் புகல் அடைந்தான். அவர் அவனை திருவாதிரை நன்னாளில் இங்கு அழைத்து வந்து பிரம்ம தீர்த்தத்தில் நீராடச் செய்யவே , அவன் தன் பேயுரு நீங்கினான் .
முனிவரும் முல்லைக்கொடியின் கீழிருந்த பெருமானுக்கு ஒரு ஆலயம் அமைத்தார் .

கௌதமர் சாபவிமோசனம் ஒருமுறை

தம்பால் புகல் அடைந்த முனிவர்கள் செய்த சூழ்ச்சியின் காரணமாக கௌதம முனிவர் பசுவதை செய்த பாவத்திற்கு ஆளானார் . அவ்வமயம் போதாயனர் என்ற முனிவரின் உரைப்படி கௌதமர் இத்தலத்திற்கு வந்து புனித நீரடி ஒரு லிங்கம் செய்து இறைவனை புஜித்தார் . அதுவே கௌதம லிங்கம் என இன்று தனிச் சன்னிதியாக உள்ளது .




குசத்துவஜன் சாபநீக்கம்

குசத்துவசன் என்ற மன்னன் ஒருமுறை சத்திய முனிவரது சொல்லிற்கு மாறாக அவர் இருந்த வனத்தில் வேட்டையாடி கொடிய புலியுருவைப் பெற்றுன். பின் அவன் முனிவரை வனங்கி வேண்ட , அவர் கூறியபடி இத்தலத்து சத்தியகூப தீர்த்தத்தில் நீராடி மீண்டும் சுய உருவைப் பெற்றுன். வைகாசி விழாவையும் தொடங்கி வைத்தான் .

சங்குகர்ணன் பேறு பெறுதல்

சங்குகர்ணன் என்ற அந்தணன் தனது குருவின் விருப்பத்திற்கு மாறாக , அவர் மகளை திருமணம் செய்துகொள்ள மறுத்தான் . அதனால் அவர் சாபத்திற்கு ஆளாகி பேயுரு பெற்றுன் . பின்னர் தன் நல்வினைப் பயனால் திருக்கருகாவூர் எல்லையினை அடைந்ததும் , பேய் உரு நீங்கப் பெற்றுன் . அன்று மார்கழித் திருவாதிரை நாள். பிரம்ம தீர்த்தத்தில் நீராடி பெருமான் முன்பு சிவபூஜை செய்து நற்பேறு பெற்றுன் .

சந்திரன் வழிபட்டது

தட்ச சாபத்தால் இன்னலுற்ற சந்திரன் ஒரு பங்குனி மாதம் பௌர்ணமியில் இங்கு சிவ பூஜை செய்து நற்கதி பெற்றுன் ஆதலால் இன்றும் ஒவ்வொரு பங்குனி பௌர்ணமி நாளிலும் சந்திரன் ஒளி இறைவன் திருமேனியில் படுவதைக் காணலாம் .

நிருத்துவர் கரு காக்கப் பெற்றது

நிருத்துவர் என்ற முனிவர் வேதிகை என்ற தம் மனைவியுடன் இத்தலத்தில் வசித்து வந்தார் . ஒரு சமயம் வேதிகை கருவுற்றிருந்த போது அவளைத் தனியே ஆசிரமத்தில் விட்டுவிட்டு வருணன்பால் சென்றிருந்தார் . அச்சமயம் ஊர்த்துவபாத முனிவர் நிருத்துவரின் ஆசிரமத்தை நாடி தம் பசிக்கு உணவுகேட்டார் . குரலைக்கேட்டும் கருவுற்றதனால் ஏற்பட்ட உடல் தளர்ச்சியால் வேதிகையால் எழுந்துவந்து அன்னமிட முடியவில்லை . இதனையறியாத ஊர்த்துவர் கோபமுற்று -ராசயட்சு - என்னும் நோயினால் வருந்துமாறு சாபமிட்டு அகன்றார். இதனால் வேதிகையின் வயிற்றுக் கருவிற்கு ஊனம் வர , அவள் இத்தலத்து இறைவனையும் , அம்பிகையையும் வேண்டித் துதித்தாள் . இதனால் வயிற்றுக் கரு காக்கபெற்று குழந்தை உருக்கொண்டது . பெருமானின் கட்டளைப்படி காமதேனுவே தன் பாலை சுரந்து அளித்தது . பின்னர் வந்த நிருத்துவர் இவ்வரிய நிகழ்ச்சியினை அறிந்து மகிழ்வெய்தி இத்தலத்து வசிக்கும் மற்றும் இத்தலத்து பெருமானையும் , பெருமாட்டியையும் வேண்டி நிற்கும் கருவுற்ற பெண்களுக்கு எந்த இன்னலும் இல்லாமல் குழந்தைப்பேறு ஏற்பட வேண்டுமென்று

வேண்டிக்கொண்டார். அவ்வாறே ஈஸனையும் , அம்பிகையையும் வேண்டும் பெண்களுக்கு எந்த கர்பகாலத்து இன்னல்களும் வருவதில்லை என்பது கண்கூடு .




பல ஆண்டுகளாக குழந்தைப்பேறு இல்லாதவர்கள் குழந்தை பாக்கியம் பெறவும் திருமணம் கூடிவராத பெண்களுக்கு திருமணம் கைகூடவும் , அன்னை கருகாத்த நாயகியை வேண்டி நெய்யினால் படி மெழுகி அம்மன் பாதத்தில் வைத்து மந்திரிக்கப்பட்ட நெய்யினை 48 நாட்கள் உண்டு வந்தால் குழந்தைப்பேறு கிட்டும் என்பது இன்றளவும் கண்கூடு . மேலும் கருவுற்ற பெண்கள் இத்தலத்து இறைவி கருகாத்த நாயகியை வேண்டி விளக்கெண்ணை மந்திரித்து வயிற்றில் தடவினால் கரு காக்கப்படுவதுடன் , சுகப்பிரசவம் ஆவதும் உண்மையே .

இறைவனுக்கு புனுகு மட்டுமே சார்த்தப்படுகிறது . வளர்பிறை பிரதோஷ நாளில் புனுகு சார்த்தி வணங்கினால் தீராத நோய்கள் எல்லம் தீர்ந்துவிடும் என்பது நம்பிக்கை . வெளியில் இருந்து புனுகு கொண்டுவர அனுமதி இல்லை . மாறாக திருக்கோயில் அலுவலகத்தில் 100 ரூபாய் செலுத்தி இரசீது பெற்றுக்கொண்டால் பிரதோஷ நாளில் சேவார்த்திகள் முன்னிலையில் புனுகு சார்த்தி அங்கிருப்பவருக்கு விபூதியும் , ஏனையோருக்கு தபால் மூலமாகவும் பிரசாதம் அனுப்பிவைக்கப்படுகிறது .
கர்பரட்சாம்பிகை சன்னிதியில் வியாழக்கிழமைகளில் நெய்தீபம் ஏற்றி வந்தால் வம்ஸ தோஷம் நீங்கி புத்திரபாக்கியம் கிடைக்கும் என்பது திண்ணம் . ஒரு வியாழக்கிழமை நெய்தீபம் ஏற்ற 40 / -ரூபாய் கட்டணம் திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொண்டால் அர்ச்சனை செய்து பிரஸாதம் தபாலில் அனுப்பி வைக்கப் படுகிறது .

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இத்திருக்கோயில் சோமாஸ்கந்தர் வடிவில் அமைந்துள்ளது . இறைவனுக்கும் , இறைவிக்கும் இடையில் வள்ளி தெய்வானையுடன் சுப்ரமணியர் சன்னிதி அமைந்துள்ளது . இம்மூன்று சன்னிதிகளையும் ஒருசேர வலம் வந்து தரிசிப்பவர்களுக்கு புத்திர பாக்கியத்தையும் , அப்புத்திரபாக்கியம் சிதைவின்றி கிடைக்க அக்கருவை காத்தருளுகின்ற அருட்பேற்றையும் வழங்கும் தலமாக இத்தலம் விளங்கி வருகின்றது .
மேலும் அன்னை கர்பரக்ஷாம்பிகை அருள் பெற்று குழந்தை பாக்கியம் பெற்றவர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவு செய்ய மழலையை தொட்டிலில் இட்டு எடுப்பது இத்திருக்கோயிலில் புனிதமானதாக கருதப்படுகிறது .




**பாடியவர்கள்**

அப்பர் மற்றும் ஸம்பந்தர் பாடல் பெற்ற தலம் .
திருநாவுக்கரஸர்தம் நினைவின்படி திருநல்லூரில் பெருமானது திருவடி தன் தலைமீது சூட்டப்பெற்றபின் அங்கு தங்கியிருந்த நாட்களில் இங்கு வந்து பெருமானை தரிசித்து சொல்மாலை சூட்டிச் சென்றார்.

ஞானஸம்பந்தர் தம் 5 ம் யாத்திரையில் கொங்கு நாட்டிலிருந்து திரும்பி சோழ நாட்டில் பல தலங்களையும் தரிசித்து வரும்போது இங்கு வந்து அன்னையையும் , அண்ணலையும் ஏத்திப்பாடிச் சென்றுள்ளார் .
சுந்தரரின் ஊர்த்தொகை பதிக இடையிலும் வைத்துப் போற்றப்பெற்றுள்ளது .
சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இடம் பெற்றுள்ளது . ராமலிங்க அடிகளாரின் - விண்ணப்பக்கவி வெண்பாவிலும் - பாடப்பட்டுள்ளது .
மேலும் அம்பலவாணப் பண்டாரம் பாடிய தலபுராணம் உள்ளது .




## பிற தகவல்கள்

நித்திய பூஜைகள் காமிக ஆகம முறைப்படி நடைபெறுகின்றன .
காலை 5 . 30 - 6 . 00 உஷக்காலம்
8 . 30 - 9 . 30 காலை சந்தி
12 . 30 உச்சிகாலம்
மாலை 5 . 30 - 6 . 00 சாயரட்சை
இரவு 8 . 30 அர்த்த ஜாமம்
திருவிழாக்கள்
விழாக்கள் அந்தந்த தினங்களில் நிறைவுடன் நடைபெருகின்றன . சுவாமிக்கு வைகாசி விஸாக பிரம்மோர்ச்சவமும் , அம்பிகைக்கு ஆடிப்பூர ம் நவராத்திரி உற்சவங்களும் மற்றும் நடராஜருக்கு 6 அபிஷேகங்கள் , அன்னாபிஷேகம் , கந்தசஷ்டி , கார்த்திகை சோமவார நாட்கள் , மஹாசிவராத்திரி , பிரதோஷங்கள் ஆகியன வெகு விமரிஸையாக நடைபெறுகின்றன .
குடமுழுக்கு 29.4.2001 அன்று நடைபெற்றுள்ளது .
முல்லைக்கொடி சுற்றிய நிலையில் இருந்த ஈஸன் கீ பீ ஏழாம் நூற்றுண்டில் கொகுடிக்கோயில் அமைப்பில் இருந்தார். பின்பு கருவரை பல்லவர்களாலும் , அதையொட்டிப் பெருங்கோயில் சோழர்களாலும் எடுப்பிக்கப்பட்டது .

இத்தலம் பஞ்சவாரண்யத்தலங்கள் எனப்படும் கோயில்களில் முதன்மையானதாக கருதப்படுகிறது .
அவையாவன , திருக்கருகாவூர் , அரதைப் பெரும்பாழி , அவளிவனல்லூர் , ஆலங்குடி மற்றும் ,திருக்கொள்ளம்பூதூர் ஆகியன .
இவற்றை தரிசிக்க வேண்டிய நேரங்கள் முறையே




1. முல்லை வனம் - திருக்கருகாவூர் - உஷக்காலம் ( விடியற்காலை )
2. பாதிரி வனம் - அவளிவநல்லூர் - காலை சந்தி
3. வன்னி வனம் - அரித்துவாரமங்கலம் - உச்சிக் காலம்
4. பூளை வனம் - ஆலங்குடி ( குருஸ்தலம் ) - சாயங்காலம்
5. வில்வ வனம் - திருக்கொள்ளம்பூதூர் - அர்த்த ஜாமம்

இவ்வைந்து தலங்களும் நேருக்கு நேராக அமைந்துள்ளன .

**அருகாமையிலுள்ள தலங்கள்**

1. வலங்கைமான் செல்லும் சாலையில் 7 கீ மீக்கள் கிழக்கே போனால் ஆவூரும் ,
2. அதற்கு சற்று முன்னர் கோவிந்தகுடியும்
3. வடக்கே தஞ்சை செல்லும் சாலையில் 7 கீ மீக்களில் திருப்பாலத்துறையும்
4. பாபனாசம் சென்று அங்கிருந்து 4 கீ மீக்கள் கிழக்கே வலங்கைமான் செல்லும் சாலையில் சென்றால் நல்லூரும்
5. வடகிழக்கே கும்பகோணம் செல்லும் சாலையில் 5 கீ மீக்கள் வந்தால் திருவலஞ்சுழியும்
6. ஆவூருக்கு கிழக்கே 3 கீ மீக்களில் பட்டீஸ்வரமும் , அதற்கடுத்த தெருவில் திருச்சத்திமுற்றமும்
7. பட்டீஸ்வரத்தினருகில் பழையாறையும்
8. வடகிழக்கே கும்பகோணம் செல்லும் சாலையில் 8 கீ மீக்களில் தாராசுரமும்
9. மேலும் 2 கீமீக்கள் சென்றால் கும்பகோணத்தில் ஆதி கும்பேஸ்வரர் கோயில் , குடந்தை கீழ்க்கோட்டமாகிய நாகேஸ்வரன் கோயில் , மற்றும் குடந்தைக்காரோணமாகிய சோமேஸ்வரன் கோயிலும்
10. தெற்கே அவளிவநல்லூர்
11. அரித்துவாரமங்கலம்
12. ஆலங்குடி ( குருஸ்தலம் )
13. திருக்கொள்ளம்பூதூர்

ஆகியனவும் உள்ளன.

**அருட்பா**

மிக்க
அருகாவூர் சூழ்ந்தழகு பெறவோங்குங்
கருகாவூர் இன்பக் கதியே

**அஞ்சல் முகவரி**

முல்லைவனநாதஸ்வாமி திருக்கோயில்
திருக்கருகாவூர் ( P.O ) பாபநாசம் ( T.K ) , PIN 614 302
தஞ்சாவூர் ( Dt ) , Phone: 04374 73423